# இறைதூதன்

## Messenger of God

UNIVERSITY OF JAFFNA LIBRARY
09 DEC 1999
PERIODICALS DIVISION

**இம்மாதச் செய்தி**

சூரியன் ஒவ்வொரு மாதமும்
ஒவ்வொரு ராசியில் சஞ்சரிக்கிறார்
மகரராசியில் பிரவேசிக்கும் காலம்
அதாவது சூரியன் தனது தெற்கு
நோக்கிய பயணத்தை மாற்றி
வடக்கு நோக்கிப் பயணப்படும்
உத்தராயண கால ஆரம்பமே
சங்கராந்தி அல்லது தைப்பொங்கல்
விழாவாக மலர்கிறது.

**செய்திக் கட்டுரை**

(3ம் பக்கம்)

சர்வமதப் பத்திரிகை
தை 1999
முரசு 10

மாதம் ஒரு முரசு
விலை ரூபா 10/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனந்தமான வாழ்வுக்கு
# அன்பை வளருங்கள்

## பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா

பிரேம சொருபிகளே!

பழைய வருஷத்துக்கு விடை கொடுத்து விட்டோம் புதிய ஆண்டை வரவேற்கிறோம் இரண்டுக்கும் உள்ள சம்பந்தத்தை உற்றுக் கவனியுங்கள்· ஒன்றுக்கு விடை கொடுப்பது மற்றொன்றை வரவேற்க. விடை கொடுக்க வில்லை என்றால் வரவேற்பது என்பது கிடையாது ஆகையால் ஒன்றை வழியனுப்பி விட்டு மற்றொன்றை வரவேற்கிறோம்

இது போலவே நம்முடைய தீய குணங்களை எல்லாம் இறைவனுக்கு அர்ப்பணம் செய்து விட்டு நல்ல குணங்களைப் பெற்றுக் கொள்வோம் துர்க் குணங்களை இறைவனுக்கு அர்ப்பணம் செய்வதில் தவறில்லை.

உண்மையில் உங்களுடைய தீய சிந்தனைகளையும் தீய செயல்கள், எண்ணங்களையும் ஏற்றுப் பொறுத்துக் கொள்ளக்கூடியவர் யாராவது உண்டென்றால் அது கடவுள் ஒருவர் தான் வேறு யாரும் இல்லை.

இதற்கு ஒரு சின்ன உதாரணம் இங்கே நூறு ரூபாய் நோட்டு இருக்கிறது இது மிக அழுக்காக இருக்கிறது எண்ணை பட்டு அழுக்கேறி அசிங்கமாக இருக்கிறது இதை யாரிடம் கொடுத்தாலும் வாங்கமாட்டேன் என்கிறார்கள்

இதற்கு கத்தரிக்காய் வெண்டக்காய் கூடக் கிடைக்கவில்லை ஆனால் அந்த நோட்டின் நடுவில் நம்பர் இருக்கிறது, ஆகையால் அழுக்கு நோட்டு ரிஸர்வ் பாங்கில் மட்டும் தான் செல்லுபடியாகுமே தவிர, வேறு யாரும் வாங்க மாட்டார்கள்.

அதேபோல உங்களுடைய கெட்ட எண்ணங்கள் கெட்ட செயல்கள் எல்லாவற்றையும் இறைவனிடம் கொடுத்து விட்டுப் புதிய நல்ல எண்ணங் களை, சிறந்தவைகளை வாங்கிச் செல்லுங்கள் கடவுள் அதை மகிழ்ச்சியோடு வாங்கிக் கொண்டு, புதிய நல்ல எண்ணங்களை உனக்குத் தருவார். இதையே மந்திர புஸ்பம் இப்படிச் சொல்கிறது.

பாபோஹம் பாயகர்மா ஹம்
பாபாத்மா பாவஸம்பவஹ

* * *

# புத்தாண்டுச் செய்தி

நான் பாவம் செய்தவன் என்பாவங்களை உன்னிடத்தில் சமர்ப்பிக்கிறேன், என்று இடைவிடாமல் கூறி வருகிறார்கள். கிறிஸ்தவர்களும் இந்த வழியையே பின்பற்றுகிறார்கள்

முன்னாட்களில் பாரத நாட்டிலும் இத்தகைய வழக்கம் இருந்து வந்தது எல்லாக் கெட்டவைகளையும் இறைவனுக்கு அர்ப்பணித்து விட்டால் அவர் எல்லா நல்லவைகளையும் தனக்குக் கொடுப்பார் என்றநம்பிக்கை இருந்தது.

இதற்கு "உபவாசம்" என்று பெயர் "உப" என்றால் அருகில் "வாசம்" என்றால் வசிப்பது, அருகில் வசிப்பது என்பதே அர்த்தம் இந்நாளில் உபவாசம் என்றால் பாலும், பழமும் சாப்பிடுவதுதான் என்று எண்ணிக் கொண்டு இருக்கிறார்கள். அதல்ல அர்த்தம் இறைவனுக்கு அருகில் அமர்ந்து இருப்பது என்பது தான் உண்மையான அர்த்தம்

இறைவன் அருகில் அமர்ந்திருப்பதால் உன்னுடைய துர்குணங்கள் எல்லாம் நீங்கி உனக்கு நல்லகுணங்கள் கிடைக்கின்றன. உபவாசம் மூலம் தான் இந்த பந்தம் இறைவனுக்கு அருகில் செல்லும் பாக்கியம் கிடைக்கிறது.

எனவே கவலைப்பட வேண்டாம். இந்தப் புதிய ஆண்டில் நல்ல எண்ணத்தை வளர்த்துக் கொள்ளுங்கள். கெட்ட சிந்தனைகளை விட்டொழியுங்கள். அன்பை வளருங்கள் உலகம் முழுவதும் நல்லபடியாக இருக்க வேண்டும் என்று பிரார்த்தனை செய்யுங்கள். நமக்கு யாரும் கெடுதல் செய்ய முடியாது. உங்களுடைய தீய எண்ணங்கள் உங்களுக்கு தீங்கு செய்கிறது. உங்களுடைய நல்ல எண்ணங்கள் உங்களை வாழ வைக்கும்.

# தூதன் கருத்து

## அன்பு அருளைப்பெற்றுத் தரும்

சாய்ராம்......!

புதிய ஆண்டு 1999 மலர்ந்துவிட்டது. அனைவருக்கும் எமது புதுவருட வாழ்த்துக்கள்.

புதுவருடத்தில் எமக்கு வரும் லாபங்கள் நட்டங்கள் சுகதுக்கங்கள் எப்படி என்று எதிர் பார்க்கிறோம்.

உண்மையில் எமது செயலுக்கு ஏற்ப பலன்கள் தான் எமக்குக் கிடைக்கிறது. என்ற உண்மையை இந்தப் புதிய ஆண்டில் தெரிந்து கொள்வோம்.

எல்லாவற்றுக்கும் காலத்தை எதிர்பார்த்துக் காத்திருப்பது பலவீனமாகும், சுகமோ துக்கமோ நல்லதோ கெட்டதோ எமக்கு எது நடந்தாலும் அதற்குக் காரணம் காலம் அல்ல நமது மனமே,

மனம் அன்புமயமாக நல்லதாக இருந்தால் எல்லாம் நல்லதாகவே நடக்கும் காலம் வெறும் சாட்சி சொரூபம் தான்.

ஆண்டவனின் அன்பு, அருள்· ஆசியைப் பெற்றுக் கொள்வதற்கு எம மனதில் அன்பை வளர்த்துக் கொள்ளவேண்டும்.

"உன்னிடத்தில் பிரேமை ததும்பி வழிகிறது. அதை ஒரு நாளைக்கு பத்துப் பேருக்காவது பகிர்ந்து கொடு" என பாபா சொல்கிறார்

அன்புக்கு இலக்கு தியாகம் தான் எந்த நிலையிலும் அன்பு யாரையும் வெறுப்பதில்லை வெகு தூரத்தில் தள்ளி இருப்பவர்களைக் கூட தனக்கு அருகில் கொண்டு வருவது அன்பு

இந்த அன்புதான் மற்றவர்களையும் அன்புடையவர்கள் என்று எண்ணவைக்கிறது; பிரிந்தவரை இணைக்கிறது மிருக குணங்களை தெய்வீகமாக மாற்றுகிறது.

அன்பு மனிதனின் பிராணன் உயிர்ச்சக்தி' ஆதாரம் பிராணனே அன்பு. அன்பு இல்லாத மனிதன் பிணத்துக்கு சமம்·

எனவே எமது சுகதுக்கங்கள் லாப நட்டங்களுக்குக் காரணம் அன்பு தான் நிறைவாக இப்புத்தாண்டில் அன்பை வளர்த்துக் கொள்வதன மூலம் பகவானின் அன்பு அருள் ஆசியுடன் நிரந்தர ஆனந்தத்தையும். அனைவரும் பெற்றுக் கொளவோம், என்ற நம்பிக்கையுடன் பிரார்த்திப்போம்.

- ஜெய்சாய்ராம் -

நமக்குள் மதபேதம் வேண்டாம். குலபேதம் வேண்டாம் தேச பேதம் வேண்டாம். ஏனெனில நாம் எலலாம் முழுமையான அன்பு நிரம்பியவர்கள் எல்லோரும் நலமாக இருக்கட்டும் எல்லோரும் சுகமாக இருந்தால் நாம் நலமாக இருப்போம்.

எனவே எல்லோருடைய நன்மையைக் கோரி மனதில் அன்பை வளர்த்துக் கொண்டால் இந்தப் பவித்திரமான புதிய வருஷத்தில் தேசம் சுகமாக, சௌக்கியமாக, ஆனந்தமாக வளர்ச்சியடையும்· முன்னேற்றம் அடையும். அமைதியுடன் இருக்கும் ஆனந்தம் நிறையும் இந்தப் புதிய ஆண்டினை நாம் அன்புடன் தொடங்குவோம்.

அன்புடன் நாளைத்தொடங்கு
அன்புடன் நாளைக் கழி
அன்புடன் நாளை முடி
இதுவே இறைவனை அடையும் வழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லையற்ற அன்பின் தத்துவத்தை போதிப்பதே பொங்கல் விழா



### பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா

அன்பின் வடிவங்களே..... !

பண்டிகைத் தினங்கள் பண்டைய காலத்திலிருந்தே மக்களுக்கு உற்சாகத்தையும் மகிழ்ச்சியையும் ஊட்டி வந்திருக்கின்றன. இவை வெறும் ஆடம்பரத்தையும் செல்வச் செழிப்பையும் விளம்பரப்படுத்துவதற்கு ஏற்பட்டவை அல்ல ஒவ்வொரு பண்டிகைக்கும் ஒரு உள்ளர்த்தம் உண்டு.

சுவையான உணவு உண்பது மட்டும் பண்டிகைக்கு அர்த்தம் ஆகாது. உண்மையான புனிதமான எண்ணங்களை வளர்த்துக் கொள்வது தான் பண்டிகை கொண்டாடுவதன் அர்த்தமாக அமைய வேண்டும்.

சங்கராந்தி என்பது சூரியன் பயணிக்கும் பாதையைக் குறிப்பிடும் நாளாகும். உலகின் மிகப் பெரிய சேவையாளன் சூரியன் பகவத் கீதையில் இதன் சிறப்பு வர்ணிக்கப்படுகிறது. உலகத்து ஜீவராசிகள் அனைத்திற்கும் வேண்டிய உணவைத் தயாரிப்பதிலும் உலகத்திற்கு வேண்டிய மழையைத் தருவதற்கும்; இரவு, பகல், பருவ காலங்கள், நேரம் மாதம், வருடம் இவற்றைக் கணிப்பதற்கும் சூரியன் உதவுகிறார்.

இத்தகைய சிறப்புக்களையுடைய சூரியன் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு ராசிக்குள் பிரவேசிக்கிறார். பன்னிரண்டு மாதங்களில் பன்னிரண்டு ராசிகளுக்கும் விஜயம் செய்கிறார். இவ்வாறு பிரவேசம் செய்வது சங்கரமணம் எனப்படும். இப்பன்னிரண்டு ராசிகளில் மகரராசி முக்கியமானது. மகர ராசியில் சூரியன் பிரவேசிப்பது மகர சங்கராந்தி எனப்படும். இதில் ஆன்மீகமான, உலகியலான நேர்மைகளும் நியாயங்களும் மாற்றங்களும் நிறைந்திருக்கும்.

தை மாதம் 13 அல்லது 14ம் திகதியிலிருந்து மகரசங்கராந்தி ஆரம்பமாகிறது இத்தினத்திலிருந்து சூரியனின் பயணம் தெற்கிலிருந்து வடக்கு நோக்கித் தொடர்கிறது. இவ்வாறு சூரியன் வடக்கு நோக்கிச் சஞ்சரிக்கும் காலம் உத்தராயண காலம் ஆகும்.

### வடக்குநோக்கிய பயணத்தின் தத்துவம்

வேதங்களின் பிரகாரம் சந்திரன் மனதைக் குறிக்கிறது சூரியன் மனிதனின் பார்வைக்கு பிரமாணமாகக் குறிப்பிடப்படுகிறது. மனிதனுடைய பார்வை தூய்மையாகவும், அசைவற்று உன்னிப்பானதாக இருக்கவேண்டும்

சூரியன் சொல்லும் மற்றொரு அறிவுரை உள்நோக்கிய பார்வையை வளர்த்துக்கொள்ளுங்கள் உலகியல் பார்வை வேண்டாம் என்பதாகும். பார்வை என்பது வெளிப்புறப் பொருட்களைப் பார்ப்பதற்காக மட்டும் தரப்படவில்லை அடிக்கடி மாறும் உலகியல் விஷயங்களைப் பார்ப்பதற்காக கொடுக்கப்பட்டதில்லை புனிதமான இதயத்தில் உறையும் தெய்வதத்துவத்தைப் பார்ப்பதற்காகத் தான் பார்வை அளிக்கப்பட்டிருக்கிறது.

எனவே சூரியனின் உத்தராயண பயணத்தின் போது, ஏதோ வடக்குப் பக்கம் சூரியன் போகிறார் என எடுத்துக் கொள்ளாது உள்ளத்தில் உறையும் தெய்வத்துவத்தை காணும்படியாக நம்முடைய பார்வையை மாற்றிக் கொள்ள நமக்கு கொடுக்கப்பட்ட வாய்ப்பு என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்தக் காலத்தில் ஜனங்கள் புண்ணியமான காரியங்களில் ஈடுபட்டு தெய்வத்தை வழிபட்டு வருகிறார்கள். இந்தப் புண்ணிய காலத்துக்காக முனிவர்கள், ரிஷிகள், யோகிகள் காத்திருப்பார்கள்,

### மறுஜென்மம் இல்லை.......

புண்ணியமான உத்தராயணத்தில் தன் உடலை உதற வேண்டுமென பீஷ்மர் பிரதிக்ஞை எடுத்துக் கொண்டார். அம்புப்படுக்கையில் ஐம்பத்தாறு நாட்கள் படுத்தபடி இந்தப்புண்ணிய காலத்திற்காகக் காத்திருந்தார். உத்தராயண காலத்தில் அமைதியாகப் புனித சிந்தனைகளுடன் தன் உயிரை விடுபவருக்கு மறு ஜன்மம் எனபது இல்லை.

இந்த உத்தராயணம் மிருகங்களுக்கும் பறவைகளுக்கும் கூட மகிழ்ச்சியளிக்கிறது சங்கராந்தி பண்டிகையில் பல சுபகரமான நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன புதிய மணமக்கள் எல்லோரும் அன்போடு வரவேற்கப்படுகின்றனர். காளைகள் கூட இந்தப் பண்டிகையில் ஈடுபடுத்தப்படுகின்றன ஆடலும் பாடலும் மகிழ்ச்சியான பேச்சுக்களுமாக கழிக்கின்றன.

இம் மாதத்தில் சூரியன் மிகவும் சாந்தத்துடன் காணப்படுகிறார். பகற்பொழுது குறைந்து சில்லென்று காற்று வேகமாக வீசும் மாதமிது கதிர்கள் தங்கநிறத்தில் ஜொலிக்க விவசாயிகள் அகமகிழ்ந்து சிரிப்பார்கள் பூக்கள் மொட்டவிழ்ந்து மலர்கின்றன இல்லங்களில் புதிய தானியங்களின் வருகையால் செல்வச் செழிப்பு இவ்வாறு மனித குலத்திற்குத் திருப்தியையும் ஆனந்தத்தையும அழிப்பதால் இந்த மாதம் மிகவும உத்தமமான மாதம்.

### முக்கிய நோக்கம்

பொங்கல் விழாவின் முக்கிய நோக்கம நம் இதயம் தூய்மையான வழியை நோக்கிச் செல்வதும் மனம் நல்ல வகையில் மாறுவதும் தான் நம்முன்னே அமைதியும் அதனால் ஏற்படும் உன்னொளியும் பெருக வேண்டும். அவற்றை இவ்வுலகில் உள்ள அனைவரோடும் பகிர்ந்து கொள்ள வேண்டும் உலகம் முழுவதும் உள்ள மக்கள் நம்மைச் சேர்ந்தவர்களே அனைவரும் ஒரே குடுபத்தினரே என்ற எண்ணம் வளர வேண்டும். இப்படிப்பட்ட எல்லையற்ற அன்பின் தத்துவத்தைப போதிப்பதே சங்கராந்தி எனப்படும் பொங்கல் விழா.

## புவியியல் சமய ரீதியாக தெட்ஷணாணயம் - உத்தராயணம்

புவியியல் ரீதியாக பார்க்கும் பொழுது பூமத்திய ரேகைக்குத் தெற்குப் பக்கத்தில் சூரியன் சஞ்சரிக்கும் காலம் தெட்ஷணாயணம் என்றும் வடக்குப் பக்கத்தில் சஞ்சரிக்கும் காலம் உத்தராயணம் என்றும் வகுக்கப்பட்டுள்ளது தெட்ஷணாயண காலத்தில் இரவு அதிகமாகவும் உத்தராயண காலத்தில் பகல் அதிகமாகவும் இருக்கும் தெட்ஷணாயணத்தில் பூமிக்கு வேண்டிய மழைநீர் கிடைக்கிறது உத்தராயணத்தில் பயிர்கள் மரங்கள் தங்கள் பயனைக் கொடுக்கின்றன.

சமய ரீதியாகப் பார்க்கும் போது தெட்ஷணாயணம் தேவர்களுக்கு இரவு காலம் எனவும் உத்தராயணம் தேவர்களுக்கு பகற்காலம எனவும் வகுக்கப்பட்டுள்ளது ஆடி மாதத்தில ஆரம்பிக்கும் தெட்ஷணாயணம் மார்கழியுடனும் தை மாதத்தில் ஆரம்பிக்கும் உத்தராயணம் ஆனி மாதத்துடனும் முடிவடைகிறது ஆனி மாத முடிவில் வைரவருக்கும் மாலையில் பொங்கல் செய்து உத்தராயணத்தை நிறைவு செய்கிறோம்,

தெட்ஷணாய காலத்தில் சமய விழாக்களும் இரவு நேரத்தை ஒத்ததாக இருப்பதை அவதானிக்கலாம். உதாரணமாக நவராத்திரி தீபாவளி விளக்கீடு முதலியனவாகும்.

இரவு நேரத்தில் அசுரர்களின் ஆதிக்கம அதிகம் எனவே இது சம்பந்தமான கந்தசஷ்டி விநாயகர் விரதம் முதலிய விரதங்கள் மூலம் அசுர பயத்திலிருந்து காப்பாற்றப்படுகிறோம்.

எமது முன்னோரின் பிதிர்களுக்குச் சாந்தி செய்யும் ஆடி அமாவாசை புரட்டாசி மாளையம் என்ற கிரியைக்ளைச் செய்து அவர்களையும் நினைவு கூர்கிறோம்,

11ம் பக்கம் பார்க்க

சத்யம் சூரியன் என்றால் தர்மம் அதன் ஒளி - பாபா -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல செயல்கள் நல்ல பலன்களைத் தரும்

- பகவான் பாபா -

சுகதுக்கங்களுக்கு அடிப்படை ஒன்று வேண்டும் இப்பிறவியிலோ, இதற்கு முற்பிறவிகளிலோ, நாம் செய்த செயல்களிற்குத் தக்கவாறு பலன்களைக் கடவுள் அளிக்கிறார்.

துரியோதனன் பாண்டவர்களின் மனைவியாகிய திரௌபதியைத் துகிலுரிய முயன்ற போது திரௌபதி கண்ணனை, கேசவா! மாதவா! வாசுதேவா மதுசூதனா என்று பலவாறாக விளித்து வேண்டினாள்.

அவளது பிரார்த்தனைகளைக் கேட்ட பின்னரும். அவளது வேண்டுகோளுக்கிணங்கி உடன் வந்து உதவ கிருஷ்ணனால் முடியவில்லை இயற்கையின் கடுமையான விதி முறையே இதற்குக் காரணம்,

இந்த விதி எல்லா இடங்களிலும், எல்லா நேரங்களிலும் செயல்படுகிறது. ஒரு மனிதனுக்குக் கால் வழுக்கினால், அவன் கீழே விழுகிறான் கல்லை மேலே எறிந்தால் அது கீழே விழுகிறது பணக்காரனாயினும் சரி ஏழையாயினும் சரி கால் வழுக்கினால் விழுவது நிச்சயம், மனிதர்கள் யாராயினும் சரி இயற்கையின் விதிகள் இவ்வாறு செயல்படுகின்றன.

திரௌபதியின் பிரார்த்தனைகளைக் கேட்ட போது. துரியோதனனின் அரச சபையில் அவளுக்குப் பாதுகாப்பளிக்கத் தகுந்த வகையில் முன்பு அவள் செய்த நற்செயல் ஏதாவது உள்ளதா என்று கிருஷ்ணன் நினைத்துப் பார்த்தான்

தெய்வத்தின் உதவிக்குத் தகுதி பெறுவதற்கு இறைவனுக்கு ஒரு இலையோ, ஒரு மலரோ சிறிதளவு புனித நீரோ ஏதாவதொன்று அளித்திருக்க வேண்டும். உலக வாழ்க்கையின் அளவில் அன்றாட வாழ்க்கையில் இந்தக் கொடுக்கல் வாங்கல் முறை செயல்படுகிறது.

பல ஆண்டுகளுக்கு முன்னால் திரௌபதி செய்த நற்செயல் கிருஷ்ணனின் நினைவுக்கு வந்தது பொங்கலன்று கரும்பை நறுக்குகையில் கண்ணனின் சுண்டு விரலில் ஒரு காயம் ஏற்பட்டது

கிருஷ்ணன் தன் விரல் வெட்டுப்பட்டது போல் துடித்தார் பக்தர்களைப் பரிசோதிப்பது இறைவனின் இயல்பு இவ்வாறு சோதிப்பதை இறைவ்ன் மிகவும் விரும்புகிறார் பக்தன் வெற்றி பெற்றால் இறைவனது அருளாசி அவனுக்குண்டு

கிருஷ்ணனின் விரலில் இருந்து இரத்தம் வழிவதை திரௌபதி, ருக்மணி, சத்திய பாமா,



போன்றோர் கண்டனர், அவர்கள் அருகிலும் இருந்து அன்புக்குப் பாத்திரமாகவும் இருந்ததால் இதைக் கண்டனர்

சத்திய பாமா பணிப்பெண்களை அழைத்து கட்டுப் போட துணி கொண்டு வரும்படி பணித்தாள் ருக்மணி துணியைக் கொண்டு வரத் தானே ஓடினாள்.

திரௌபதி பார்த்தாள் தனது புடவையின் ஓரத்தைக் கிழித்து அந்தத் துண்டால் விரலுக்குக் கட்டுப் போட்டாள்,

இதைக் கண்ட ருக்மணிக்கும் சத்தியபாமாவுக்கும் வெட்கத்தால் முகம் சிவந்தது. நமக்கு கிருஷ்ணனிடம் அத்தகைய அன்பு இல்லை நாம் உடல் உணர்வுடனேயே இருக்கிறோம் சூழ்நிலைக்குத் தகுந்தவாறு மனம் மாறவில்லை திரௌபதியின் பக்தி இந்த அளவுக்கு ஆழமானது அவர்கள் மனம் வருந்தி வெட்கப்பட்டார்கள்.

முன்பு நடந்ததை இவ்வாறு நினைத்து அறிந்த கிருஷ்ணன் திரௌபதி அன்று காட்டிய அன்புக்கு இன்று பிரதிபலன் தரவேண்டும் என்று விரும்பினார்.

இவ்வுலகத்தில் ஏதாவது ஒன்று கொடுத்தாலேயல்லாது தமக்கு விருப்பமான ஒன்றைப் பெற இயலாது. ஒரு கைக் குட்டை வேண்டுமென்றால் 10ரூ கொடுத்து அதைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இறைவனுக்கும் பக்தனுக்கும் உள்ள உறவு இத்தகையதல்ல.

நீ தினையளவு கொடுத்தாலும் இறைவன் அதை ஏற்று உனக்கு மலையளவு வழங்குவார், குசேலர் கிருஷ்ணனுக்கு ஒரு கைப்பிடியளவு அவல் கொடுத்தார். அதற்குப் பதிலாக அளவற்ற செல்வத்தைப் பெற்றார் சத்தியபாமா கிருஷ்ணனை விற்க ஏற்பாடு செய்தபோது ஒரே ஒரு துளசி இலை மட்டுமே கொடுத்தாள் ருக்மணி

"கேசவா, மாதவா, தேவா மதுசூதனா என்று திரௌபதி பிரார்த்தித்தாள், அவள் கணவர்கள் பெரும் வீரர்கள். பலமும் தைரியமும் அறிவும் நிரம்பப் பெற்றவர்கள் அவர்கள் யாவராலும் இந்த அவல நிலையைத் தடுக்க இயல வில்லை. கிருஷ்ணனால் மட்டுந்தான் தன்னைக் காப்பாற்ற இயலும். மற்ற யாராலும் இயலாது என்று பிரார்த்தித்தாள்.

முன்பு அவள் செய்த தியாகத்துக்கு இப்போது பெரும் பலன் கிடைத்தது, அவள் அளித்தது சிறு துண்டுத்துணி,

கிழித்தது புடவையின் ஒரு பகுதி ஆயினும் இச் செயல் புனிதமான இயல்பான பக்தியினாலும் அன்பினாலும் தூண்டப் பெற்றதாகும் கிருஷ்ணன் இந்தச் சிறு துணி, அளவற்ற துகிலாக வளரவேண்டுமென்று திருவுளங் கொண்டார்.

அக்ஷயம் (முடிவுற்று வளர்க) என்று கூறினார் திரௌபதியின் துகில் உரியும் போது வளர்ந்து கொண்டே இருந்தது.

தெய்வீக அருளின் பயனாக செயல்களின் விளைவுகளில் இருந்து தப்பிக்க முடியும் இவ்வாறு கட்டளையாக இத்தகைய விதிமுறை வகுக்கப்பட்டுள்ளது செயல் எதுவோ அதற்குத் தக்க பலனை அனுபவித்தேயாக வேண்டும்.

---

## மனிதர்களே கவனியுங்கள்

தூண்டிலிற் பாய்ச்சிய ஊனை விரும்பி மீனானது தன் உயிரை இழக்கிறது அம்மீன் மனிதனுக்கும் ஊனாகிறது மனிதன் விரும்பி உண்கிறான் அம்மனிதன் பின் பாவக் கடலில் இட்ட தூண்டிலிற் பட்டுப் பாவத்திற்கு இரையாக ஏதுவாகிறான் "பகுத்தறிவு படைத்த மனிதனே! நீயும் அவ் அற்ப மீனைப் போல உன் உயிரை இழப்பதை நீ உற்று உணர்வாயானால் நீயும் பின் ஊனை உண்டு உன் உடலை வளர்க்கத் தலைப்படாதே ஊனை உண்டு உடலைப் பெருக்க எண்ணாதே அவ் ஊனில் உன்னை வருத்தும் மாயத் தூண்டில் மறைந்து கிடககிறது,

## "மலர் பறித்து இட்டு உன்"

"மலர்" என்பது உனது மனமாகிய உள்ளக் கமலம் உன் நெஞ்சில் உள்ள அம் மலரை அநேக கள்வர்கள் கவர்ந்து அதன் பிரயோயசனத்தை உன்னை அடைய விடாது தடுக்கின்றனர் அவர்களிடமிருந்து உனது மனமாகிய மலரைப்பறி அதைப் பரம் பொருளின் பாதத்தில் இட்டு அர்ச்சி அவர் கொடுக்கும் அமுதமாகிய திருவருளை அனுபவி அப்போது நீ உனது பிறவிச் சமுத்திரத்தினின்று நீங்குவாய்.

தொகுப்பு: இ. இந்திரா

---

## பற்றற்ற கர்மம் செய்தால் ......

ஆத்மாவில் இன்புற்று, ஆத்மாவில் திருப்தியடைந்து, ஆத்மாவில் மகிழ்ந்திருப்பவனுக்கு வினையாற்றும் கடமையில்லை.

அவனுக்கு கர்மம் செய்து ஒன்றைப் பெறுதலும், செய்யாது எதையாவது இழத்தலும் இல்லை. ஏதாவது பொருளை நாடி உயிர்களைச் சார்ந்திருப்பதும் அவனுக்கில்லை.

ஆகையால் எப்பொழுதும் பற்றற்று பண்புடன் பெருவினையாற்றுக ஏனென்றால் பற்றற்றுத் தொழில் புரியும் புருஷனே பெருநிலையைப் பெறுகிறான்.

—பகவத்கீதை—

---

பரம் பொருள் நேரிடையாக உபதேசித்த பெருமை கொண்ட நீதி நூல் பகவத்கீதை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவையும் பக்தியும்

**எஸ் – ஜெயரட்ணராஜா**
யாழ்ப்பாணம்

ஒவ்வொருவரும் தம்மாலான வகையில் பிறருக்கு உதவி செய்ய ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஏழைகளாக இருப்பவர்கள் சரீர உபகாரமும், பணக்காரர்கள் பொருள் உதவியும் செய்யலாம், செல்வாக்கு உள்ளவர்கள் மற்றவர் நிலை மேம்பட தமது செல்வாக்கை உபயோகிக்கலாம் இவ்வாறு ஒவ்வொருவரும் சமூக சேவை செய்ய வாய்ப்பு உண்டு

இக்காலததில வறுமை நோய் அறியாமை ஆகியவற்றை ஒழிக்க கூட்டுறவு முறையில் சேவை செய்கிறார்கள். இச் சேவையால் முழுப்பலனும் கிடைத்து விடுவதில்லை.

பொய் பேசுவதையும், லஞ்ச ஊழல்களையும், கல்வியால் ஒழிக்க முடிவதில்லை. தேவைகளை பெருக்கிக் கொள்வதால் சதா அதிருப்தியில் வாழ நேரிடுகிறது எளிய வாழ்க்கையில் தான் உண்மையான சந்தோஷத்தை காண முடியும்.

மக்களுக்கு சமுதாய வாழ்க்கை உணர்வு ஏற்படுவதற்கு தான் கோயில்களில் விசேட விழாக்கள் நடத்துகிறார்கள்,

நமக்கு ஒருவர் உதவி செய்தால் அவருக்கு நன்றி செலுத்துவதே உர்யந்த குணம் அதுபோல நாம் இறைவனுக்கு செலுத்தும் நன்றிக்கடன் யாகம். (உலகம செழிக்க மழை பெய்ய நோய் நொடி இன்றி வாழ)

இன்றைய காலகட்டத்தில் பாடசாலைகள் ஆஸ்பத்திரிகள் சமூகசேவை ஸ்தாபனங்கள் இருந்தாலும் அவற்றின் நோக்கங்கள் சரியாக ஈடேறுவதில்லை.

காரணம் பக்தி (அன்பு) இல்லாத சேவை மனப்பான்மை ஆண்டவன் அருளில் அசையா நம்பிக்கை வைத்து சகிப்பு சக்தி பெறுவதே மக்கள துயர் தீர்க்கும். அருமருந்து பக்தி ஒன்று தான்

நம் கஷ்டங்களை சகித்து கொள்வதற்கு சக்தி தருவது பக்தி தான். எனவே தான் நம் முன்னோரர் கோயில் இல்லா ஊரில் குடி இருக்க வேண்டாம் என்றனர்.

ஆலயத்தில் மூலமூர்த்திக்கு நிவேதனஞ் செய்தல் ஏகபரம் பொருளுக்கு நன்றி செலுத்தும் தன்மையாகும். எம்மால் ஓர் உயிரைத்தானும் உண்டு பண்ண முடியாது.

எனவே உலக ஜீவராசிகளை படைதது காத்து அவைகளின் பசி தாகதலை தீர்க்கும் இறைவனுக்கு நாம் உட்கொள்ளும் உணவையோ தண்ணீரையோ அர்ப்பணம் செய்யாமல இருப்பது நன்றி அற்ற செயலாகும்.

அநேக தர்மங்கள் இருக்கின்றன அவற்றில் எல்லாவற்றிலும் சிறந்தது மூலதாமம் ஆலயபூசை இப்பூசை குறையாமல் ஒழுங்காக, காலம் தவறாமல் நடைபெறுகின்றதா என்பதில் தான் அருள் ஆட்சி சுபீட்சம் எல்லாம் கிடைக்கும் இதற்கு நல்லூர் கந்தன் கோவிலே சாட்சி சுற்றியுள்ள மககள் நன்நெறியால் செல்வாக்குடன் வாழ கின்றனர்.

ஆலயம் தொழு அரனை மறவேல், திருமாலுக்கு அடிமை செய் இவை ஒவ்வொன்றும் நாம் செய்ய வேண்டிய கடமையை நினைவு படுத்துகின்றது. ஒவ்வொரு நாளும் ஆலயம் போக முடியாதவர்கள் கிழமையில் ஒருநாள் ஆலயம் போவது வீட்டில் தினமும் "நாம" பாராயணம் செய்வது என்று வைத்துக் கொண்டால் மனித வாழ்வு மேம்பட சமுதாயம் சிறக்க நாட்டில் சுபீட்சம் ஏற்படும்.

# ஆண்டவன் கிருபையை பெறுவது எப்படி?

**திருமதி. யோ. பொன்னுராசா**
வட்டுக்கோட்டை.

எங்களுள் பலருக்கு எழும் கேள்வி நாம் எவ்வாறு ஆண்டவன் அருளைப் பெறுவது என்பதே அதை எங்கு எவ்வாறு தொடங்குவது என்பதாகும் நாம் ஒரு மாபெரும் ஆத்மீக அல்லது புண்ணிய புருஷரின் வழிநடத்தல் மூலமே ஆண்டவன் கிருபையைப் பெறும் வாய்ப்பை அடைய முடியும்.

ஆண்டவனை அறிந்த மகான்களால் மாத்திரமே மக்கள் மனதுள் புகுந்து ஆண்டவன் பக்கமாய் திருப்பி எங்களுக்குள் ஆண்டவன் கருணையை பொழிய வைக்க முடியும்.

நாம் ஆண்டவனை அடையவேண்டும் என்னும் தாகத்தையும் எங்களுக்குள் எழுப்பி ஒரு அவாவையும் விழிப்புணர்ச்சியையும் நிரந்தரமாக ஏற்படுத்த முடியும் ஆகவே முதல் நாம் ஒரு பெரியாருடன் தொடர்பு ஏற்படுத்தி அவரை எமது குருவாக ஏற்க வேண்டும்.

எங்களுள் பலருக்கு ஆண்டவனின் கிருபைக்காக நாம் ஏன் அலைய வேண்டும் என்றும் கேள்வி சிலசமயம் எழுவதுண்டு காலங்காலமாக எத்தனையோ மகான்கள் கடவுளை நேரில் தரிசித்து அவர் எங்கும் வியாபித்துள்ள பரிபூரணர் என அறிந்துள்ளார்கள்.

எங்கள் வாழ்வின் நோக்கம் ஆண்டவனை அடைந்து அவர் கிருபையைப் பெற்று என்றும் அழியா சாந்தியையும் ஒளியையும், எம் தொடர் பிறப்பில் இருந்து விமோசனத்தையும் பெற வேண்டும் என்பதே ஆதலால் நாம் ஒரு ஞானியின் துணையுடன் ஆண்டவனைக் காண வேண்டும் என்னும் ஆவலை வளர்க்க வேண்டும்.

உதாரணமாக ஒரு அன்பர் யாத்திரை செய்த இடத்தில் அவருக்கு அதிஷ்ட வசமாக ஒரு ஞானியை சந்திக்கும வாய்ப்பு கிட்டியது அவரின் கருணையால் அன்பரின் வாழ்வில் பல நன் முன்னேற்றம் ஏற்பட்டு ஆத்மீகப் பாதையில் நாட்டம் உண்டாயிற்று.

அவர் தன் ஊர் திரும்பியதும் தன் நண்பர்களிடம் ஞானியைப் பற்றியும் அவர் மூலம் தான அடைந்த நன்மை பெருமைகளைப் பற்றியும் புகழ்ந்து கூறினார்.

அதைக் கேட்ட நண்பர்களும் தாமும் அந்த ஞானியை அவசியம் சந்தித்து அவர் போதனைகளைப் பின்பற்ற வேண்டும் என்னும் பேரவாவினால் அவரிடம் செல்லவோ அல்லது அவரைத் தம்மிடம் அழைக்கவோ முயல்வார்கள் இவ்வாறு எங்களுக்குள் எழும் தாகமே நாம் ஆண்டவரின் கருணையைப் பெற வழியைத் தேட வைக்கும்.

ஆண்டவனின் கருணை வடிவம் தூர இல்லை அது எம் முள்ளே தானுண்டு அப்பொக்கிஷத்தைக் கண்டு பிடிக்கும் வழியைத் தேட நம் முன் இருக்கும் நித்திய பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் வழிகாட்டலுடனும் துணையுடனும் அவர் கிருபையைப் பெற்று நாம் இப் பிறவிப் பெருங் கடலைக் கடந்து அழியா முக்தி நிலையைப் பெறுவோமாக.

* * *

# பாபாவின் அதிசய லீலைகள்

**V. S. சிவபாதசுந்தரம்**

இற்றைக்கு முப்பது வருடங்கள் முன்பாக நான் யாழ்ப்பாண சுங்கத் திணைக்களத்தில் வேலை செய்து கொண்டிருந்தேன்.

அக்கால கட்டத்தில் பிரதான வீதியில் வசித்து வந்த வைத்திய கலாநிதி சோமசுந்தரம் வீட்டில் உள்ள பாபாவின் படத்தில் இருந்து விபூதி சொரிந்து கொண்டிருப்பதாயும் மக்கள் சென்று பார்வையிடுவதாயும் செய்தி ஒன்று வெளியாகியது வைத்திய கலாநிதி ஒரு சாயி பாபா பக்தர் என்றும் பேசப்பட்டது.

இக்காலத்தில் துணைவியார் கர்ப்பவதியாய் இருந்தார். முன்னைய நேரங்களிலும் பார்க்க சில வித்தியாசமான குணங்கள் தென்பட்டதால் மருத்துவ நிபுணரிடம் சென்றோம் பரிசோதனைக்காக ஆஸ்பத்திரியில் தங்கும்படி சொன்னார்.

மனைவியைப் பார்க்க வந்த எனது பெரிய தகப்பனும் அண்ணனும் பகவானைப் பற்றிக் கதைத்தனர். அவர்கள் மட்டும் பாபாவை உயர்வாகப்பேசுகிறார்கள் ஆனால் எனக்குமட்டும் ஏன் அப்படித் தோன்றவில்லை என்று எண்ணினேன்.

மறுநாள் மாமா ஒருவர் ஆஸ்பத்திரிக்கு வந்தார் அவர் பகவானின புத்தகம் வைத்திருந்தார் நான் அதைக் கேட்டுப் பார்க்க எண்ணிக் கொண்டிருக்கும் போதே மாமா அதை படித்து விட்டுத்தரும்படி என்னிடம் தந்தார்.

புத்தகம் படித்த பின் தான் நூறுவீதம் நம்புவேன் என்று நினைக்க அடுத்த நாளே புத்தகம் கையில கிடைத்து விட்டது இதை மனைவிக்குச் சொல்லிப் பெருமைப்பட்டேன் பகவானின் லீலையை என்னவென்று சொல்வது

இதே சமயம் எனக்கு கொழும்புக்கு வேலை மாற்றம் வந்தது நான் பிரசவம் முடியும் வரை நிற்க வேண்டும் என்பதே என் மனைவியின் விருப்பம் மாற்றக் பிற்போடுமாறு எழுதிய கடிதம் மறுக்கப்பட்டது எனவே ஒரு அரசியல வாதியின் உதவியை நாடினோம் முடிவு தெரியாத நிலையில் இருந்தோம்.

11ம் பக்கம் பார்க்கக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிமலர்கள்

### பகவானின் உறுதிமொழி

புனித புட்டபர்த்தி வாஸி
பெருங் கருணைப் பேராளன்
கரத்தினைப பற்றிக் கொண்டு
உன்னை என்றும் பாதுகாப்பான்
பக்தா! இதனை நினைவிற்கொள்
இதனை என்றும் மறவாதே

- பாபா -

## வாழ்க சாயிராம்

இருளில் மறைந்த ஆன்மா
மருளில் உறைந்து இருக்க
அருள் ஒளி தேடி அவனியில்
காத்திருந்த ஆன்ம விளக்கில்
நீ ஒளிரும ஞான தீபம்

அல்லல் பட்ட நெஞ்சில்
மின்னல் போல உள் முகம் தெரியும்
வினைகள் எரியும் ஆன்ம
மனைகள் சிரிக்கும்

ஞானக்கடலில் முத்தான தெய்வமே
கானக குயிலின் ஓங்காரமே
வானக் குடிலின் கானம் பாடும் புவியில்
ஞானக் குரலாய் நீ இருப்பாய்

கலியுகத்தின் கலியூகனே
மலியும் பாவம் தீர்க்க
புவியில் துளளி வரும் ஞானக்கடல் நீ
கவியில் கவிபுனைய ஆத்மாககள் காத்திருக்கும்

வாழ்க சாய்ராம் ஓங்கார வேதம் நீ
வாழ்க சாயிராம் வேதத்தின் நாதம் நீ
வாழ்க சாயிராம சத்தியத்தின வேதம் நீ

க. இந்திரகுமார்
கொடிகாமம்

* * *

## சாயி அம்மா

வாழ்க்கை எனும் ஓடத்திலே தத்தளித்த வேளையம்மா!
பாலைவனமாய் என்வாழ்வு செயலற்று இருந்ததம்மா!
பாவை எந்தன் வாழ்வினிலே பணம் அற்ற காலம் அம்மா!
சோர்வுடனே யான் சோகமாய் இருந்த வேளையம்மா!
கர்மவினை தீர்க்க எனக்கு தண்டனைகள் தந்தாயம்மா!
திக்கற்ற எனக்கு திசைகாட்டி நின்றாயம்மா!
இருள் மேகம் கூடி இருந்த என் வாழ்க்கையம்மா!
ஒளி வெள்ளம் ஆக்கிய என் சாயி அம்மா
என் வாழ்வில் உனை மறவேன் நான் அம்மா!

ந சக்தியா

* * *

## பொங்கலே நீ வருக!

இருண்ட கருவிழிகளின்
இருள் துடைக்க பொங்கலே நீ வருக!
பாடு படும் ஏழைகளை
பாராட்டி வாழ்த்திட பொங்கலே நீ வருக!
யுத்த மேகம் சூழ்ந்த நேரத்தில்
அமைதி ஒளியைப் பரப்பி பொங்கலே நீ வருக!
பச்சை வயலைப் போல் – இவ்வுலகை
பசுமையாய் மாற்றிட பொங்கலே நீ வருக!
இதயத்தை அன்பாக்கி – என்றும்
இன்பமாய் வாழ்ந்திட பொங்கலே நீ வருக!
என்றும் உன்னைப் போல்
எவரையும் தூய்மையாக்கிட
தைப்பொங்கலே நீ வருக! வருக!

கு. ஹிந்துஜா

★ ★ ★

## நேர்மையாய் நடந்தால்.........

மானிடர் நேர்மையாய் நடப்பின்
சண்டை ஏன் சச்சரவு ஏன்
மக்கள் நேர்மையாய் நடப்பின்
வக்கீல் ஏன் நீதிபதி ஏன்!

சகோதரர் ஒற்றுமையாய் நடப்பின்
வீட்டில் துன்பம் ஏன் துயரம் ஏன்
உறவினர் ஒற்றுமையாய் நடப்பின்
உதவிக்கு பிறர் ஏன்!

மாணவர் நேர்மையாய் நடப்பின்
ஆசிரியருக்கு பிரம்பு ஏன்
வியாபாரிகள் நேர்மையாய் நடப்பின்
கஷ்டம் ஏன் களவு ஏன்!

உயர் அதிகாரிகள் நேர்மையாய் நடப்பின்
கைக்கூலி ஏன்
நாங்கள் சைவ உணவு உண்பின்
பலியிடுதல் ஏன்!

– ஜெ. கலையரசி –

★ ★ ★

கடவுளை நீ நெருங்க நெருங்க சாந்தியையும் பிரேமையையும் உணர்வாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருநாகமும் சோலைக் குயிலும்

## - உருவகக்கதை -

அது ஒரு விவசாயக் கிராமம் அதைச் சுற்றி பற்றைக் காடுகள் வளர்ந்து இருந்தன அக்காட்டில் கீரிகளின் நடமாட்டம் கூடுதலாக இருந்தன. பாம்புகள் பயத்தின் காரணமாக வெளியேறி இருக்க வேண்டும். ஆனால் ஒரு கருநாகம் மட்டும் அங்கு வசித்து வந்தது. எப்படியாயினும் நிம்மதியற்ற வாழ்க்கையே அதற்கு அதனால் இந்த ஊரை விட்டே வேறு இடத்துக்குச் செல்லத் தீர்மானித்தது.

அன்றொரு நாள் எதிர்பாராத பெருமழை சொற்ப நேரத்தில் வெள்ளம் கரைபுரண்டு ஓடத்தொடகியது இச்சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திய கருநாகம் ஓடும் வெள்ளத்தில் துள்ளிப் பாய்ந்து கீரிகள் காணாத வகையிலே தலையை மாத்திரம் வெள்ளத்தின் மேல் நீட்டிக் கொண்டு நீந்திச் சென்றது.

ஒருவயற் கரையை அடைந்ததும் மெதுவாக தண்ணீரிலிருந்து வெளியே வந்தது வரம்பில் சறறு இளைப்பாறியது. இக்கிராமம் எப்படிப்பட்டதோ எனற சிந்தனையுடன் பாதுகாப்பான இடமொன்றைத் தேடியது

> "தானும் துன்பப்படாமல, மற்றவரையும் துன்புறுத் தாதவன் வாழ்க்கை தான் மிகவும் சிறந்தது."
>
> - பாபா -

மழை வந்த அதிஷ்டம் போல பெரிய கறையான புற்று ஒன்று வரம்பின் முடிவில் இருப்பதைக் கண்டது. பலவழிகளிலும் வசதியாக இருப்பதை பார்த்து மகிழ்ந்தது இனி எனக்கு நல்ல காலம் பிறந்துள்ளது என்று எண்ணிப் பெருமைப்பட்டும் கொண்டது.

இப்படியாக பல நாட்கள் கழிந்தன. முன்னைய ஊரைப்போல் இங்கு கீரியின் நடமாட்டமேயில்லை தனக்கு விரும்பிய உணவாக எலி தவளை போன்றவை தாராளமாக கிடைத்தன.

மற்றும் பிராணிகள் தன்னைக்கண்டு ஒதுங்கியமை போன்ற செயலகள் பாம்பிறகு மென் மேலும் மகிழ்ச்சி பொங்கி தேகமும் குளுகுளு வென்று வளர்ந்தது நாகபடமும் பெருத்தது. சில வேளைகளில் படத்தை விரித்தும், பயங்கரமாக சீறியும் காட்டியது.

இடம் பெயர்வால் அனேகமானவர்களுக்கு கஷ்டம் தான ஏற்படும் ஒரு சிலருக்கு அதிஷ்டம் கிடைப்பதுமுண்டு நாகத்திற்கு அதிஷ்டம் தான் ஏற்பட்டிருக்க வேண்டும் எல்லாம் நல்லபடியாக அமையவே பாம்புக்கு பழைய நினைவுகள் மறையத் தொடங்கியது.

இப்படியாக ஒரு நாள் பாம்புக்கு ஒரு பெரிய எலி வகையாக மாட்டிக் கொண்டது அதனை உயிருடன் விழுங்கியும் விட்டது. அந்த நிம்மதியில் வரம்பொன்றில் மல்லாக்காக கிடந்தது.

✻ இராசவல்லவன் இராசயோகன் ✻
கிராம அலுவலர்
மானிப்பாய்.

சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டிருந்த வேளையில் யாருடனாவது வீண்வம்புக்குப் போக வேண்டும் போல் அதறகிருந்தது அந்த நேரத்தில வயல் பககமாக இருந்த மாமரததை நோக்கி சோலைக் குயில் ஒன்று பறநது வந்து ஒரு கொப்பிலிருந்து கூவ ஆரம்பித்தது.

ஆணவத்தில் அந்த நாகத்திறகு குயிலின இனிமையான ஓசை அடிபட்ட கழுதை கத்துவது போல இருந்தது.

"ஏய் குயிலே நீ இனிமையாகப் பாடி மற றவர்களை மகிழ்விக்கின்றாய என நினைக்காதே அபபடிததான உனது குரல இனிமையானது என எடுத்துக் கொண்டாலும உனது பிறவியின் தவறுகளை யார் சொலலிக கொள்கிறார்கள்.

தந்திரத்தில சிறந்த பறவையெனப்போற றப்படும் காக்கையையே நீ ஏமாற்றுகிறாய் அதன் கூட்டில களளத்தனமாக முட்டையிடுவது மாத்திரமல்ல அவைகளைக் கொண்டே உனது குஞ்சுகளுக்கு உணவும் கொடுக்கப் படுகிறதே குஞ்சாய் இருக்கும போது காக்கைக் குஞ்சைப் போல் பாசாங்கு செய்து ஏமாற்றி அதன் அரவணைப்பில் சுகத்தைப் பெறுகின்றாய் பின் பறக்கும் தன்மை அடைந்து கூட்டிலிருந்து வெளியேறும உனது பிள்ளைகளைக்கூட பெற்றோர் என்ற ரீதியில அணைக்கிறாயா, அல்லது ஒரு பிடி உணவு அவர்களுக்குக் கொடுத்து மகிழ்கிறாயா, எனக்கென்ன என்ற மாற்றாந் தாய் போலல்லவா நடக்கிறாய் இந்த வண்டவாளங்கள் தெரியாத கவிஞர், புலவர், எழுத்தாளர் எல்லோரும் உன்னையும் உனது குரலையும வர்ணித்து எத்தனையோ படைப்புக்களை எழுதியுள்ளனரே என்று ஏளனமாகக் கேட்டது

இதைக் கேட்ட குயில் மூக்கு வெட்டப் பட்ட சூர்ப்பனகை போல் அவமானம் அடையவில்லை சற்றுக் கோபத்துடன்

"நாகமே நீ சொல்வது உண்மை தான் இவ்வளவும் நாங்கள் செய்தாலும் நீதியாகத்தான் நடக்கின்றோம் காக்கையின் வீட்டில் முட்டை இடுகின்றோம், ஆனால் அவ்வீட்டை முற்றாகக் கைப்பற்றுவதில்லை அல்லது வீட்டுக்காரரைக் கலைப்பதுமில்லை முட்டையிடுவதற்கு குறிககப் பட்ட நாட்கள் மாத்திரம் தான் 'அதைப்பயன் படுத்தி பின்னர் வெளியேறி உரியவர் அனுபவிப் பதற்கு விடுகிறோம். காக்கையன்னை அரவணைப் பில் இருக்கும் போது அவர்களின் பிள்ளைகளாகவே வாழ்கிறோம்.' அவர்கள் கொடுக்கும் பூச்சி, புழுக்கள் மற்றும் அழுகிய பிணங்களை எமது சகோதர காக்கைக் குஞ்சுகளுடன் மகிழ்வோடு உண்கிறோம் இவ்வளவும் எமது அறியாமைப் பருவத்தில் நடைபெறுகின்றன.

பின்னர் முதிர்ச்சி அடைந்ததும் இவ்வுணவுகளை வெறுக்கிறோம் புலால் உண்ணும் பழக்கத்தை அறவே விரும்பாமையால் காக்கையன்னையிடம் எமது குரலைக் காட்டியதும் அவர்கள் எம்மை வெளியேற்றி விடுகிறார்கள் மீண்டும் நாங்கள் அவர்களுக்கு இடைஞ்சல் கொடுக்காமல் தனியாகவும் பழவகைகளையும் உண்டு வாழ்கிறோம் எங்களால் எந்த உயிரினமும் இடைஞ்சல் படுவதில்லை அல்லது நாம் எந்த உயிரையும் கொன்று உண்பதுமில்லை.

> நீ யாரையாவது வருத்தினால் உனக்கு பத்து மடங்கு துன்பம் வந்து சேரும். ஆகவே யாரையும் வருத்தப்படுத்தாமல் நீயும் வருந்தாதே!
>
> - பாபா -

எம்மோடு ஒப்பிட்டு பார்க்கும் போது நீ எவ்வளவு கொடூரமானவன் உன்னைக்கண்டாலே பயங்கரமாக இருக்கும் நீ எங்கு வாழ்கிறாய் பல வருடகாலம் தமது உழைப்பால் கட்டிய கறையானின் வீட்டில் அத்துமீறிக் குடியிருந்து கொண்டு அவர்களையும் அவர்கள் பாதுகாப்பாக வைத்திருக்கும் இராணியையும் கொன்று ஏப்பம் விடுகிறாய் அந்த இனம் அப்படியே அழிந்து விடுகின்றது. உன்னால் தீண்டப்பட்டவர்கள் தப்புவதே அத்தி பூத்தாற்போல் இருக்கும் எனது வாயில் இனிய குரலைத்தந்த இறைவன் உனது வாயில் கொடூர நஞ்சை கொடுத்திருக்கிறாரே அதனை நீ அறியவிலலையா என்று கூறி குயில் பறந்து சென்றது.

குயில் கூறியவற்றை நாகம் சிந்தித்துப் பார்த்தது. எமது வாழ்க்கையுடன்பார்க்கும்போது குயிலின் நிலை எவ்வளவோ மேல் என எண்ணியது. எனது வண்டவாளத்தை அறியாமல் மற்றவர்களை இழிவு படுத்துவது எவ்வளவு மடமை என எண்ணியபடி புற்றுககுள் மெதுவாக சென்று விட்டது.

★ ★ ★

ஒருவரையும் இகழ்ந்து பேசாதே, ஈசனையே அனைவரிலும் காண. — பாபா —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயேசுநாதர் கேட்ட மூன்று வரங்கள்

**- பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா -**

ஒருமுறை இயேசுநாதர் தன் தாயின் அனுமதியுடன், பாலைவனப் பகுதிக்குச் சென்று நாற்பத்தியிரண்டு தினங்கள் தவம் செய்தார் அப்படிச் செய்யும் போது தன் உண்மையான 'நான், என்ன என்பதை உணர்ந்து கொண்டார். மூன்று வரங்களைக் கோரினார். என்ன அவை?

> **நீ பூரண சற்குணமுள்ளவனாக இருக்க விரும்பினால், உனக்கு உண்டானவைகளைத் தரித்திரருக்குக் கொடு அப்போது பரலோகத்தில் உனக்கு பொக்கிஷம் உண்டாயிருக்கும். அப்போது என்னைப் பின்பற்றி வா**
>
> இயேசுகிறிஸ்து

''என் தந்தையே! எனக்கு மூன்று வரங்களைக் கொடுத்தருளுங்கள் என்றார். முதலில் நீ எனக்கு இந்த வாழ்க்கையைக் கொடுத்திருக்கிறாய்! இந்த வாழ்நாளில் இங்கு உயிர் வாழும் எவரையும் நான் துன்புறுத்தவோ, வருத்தப்பட செய்யவோ கூடாது! தவறுகள் ஏதாவது இருந்தால் அவற்றை ஒப்புக் கொள்வேனேயன்றி அசத்தியமான சொற்களை சொல்ல மாட்டேன் அவ்வாறு உண்மையான பாதையில் நான் நடக்குமாறு பார்த்துக்கொள்! இது முதல் கோரிக்கை!

பொறாமையாலும், தீயநோக்கங்களாலும் என்னைக் குறித்து எவர் பேசும் சொற்களையும் விமரிசனங்களையும், கேலிகளையும் நான் பொருட்படுத்தாமல் தாங்கி ஏற்றுக் கொள்ள வேண்டும், நல்ல விஷயங்களைப் பார்த்து சிலர் பொறாமைப் படுவார்கள். நீ முன்னேறுவதையும் வளமாய் இருப்பதையும் கண்டு சிலருக்குப் பொறாமை ஏற்படும். நீ மகிழ்ச்சியாயயிருப்பதையும் கண்டு பொறாமை சிலருக்கு உண்டாகும்.

இது சில மனிதர்களுடைய குறுகிய மனப்பான்மை! இப்படி இருப்பது உண்மையான மனிதனின் இதயம் அல்ல! மிருகங்களுக்குக் கூட இத்தகைய பொறாமை கிடையாது. சுயநலம் அதிகமாக இப்படிப்பட்ட பொறாமைக் குணம பெருகுகிறது.

அவ்வாறு பொறாமை பிடித்தவர்கள் என்னைத் துன்புறுத்தலாம். இப்படிப்பட்ட துன்பங்களைத் தாங்கிக் கொண்டு சமநிலையில் இருக்கக் கூடிய மனதை எனக்கு கொடுங்கள்! இது இரண்டாவது கோரிக்கை.

மூன்றாவது, அன்பு இந்த அன்பை நான் யாருக்கும் தரமாட்டேன். உன் பாதங்களிலேயே இந்த அன்பை அர்ப்பணம் செய்ய வேண்டும். உனது சேவையிலேயே என் காலத்தைக் கழிப்பேன்! உன் ஆனந்தமே என் ஆனந்தம் நீயும் அன்பின் வடிவமே நானும் அன்பின் வடிவமே நீயும் பூர்ணம் நானும் பூர்ணம்! இந்தப் பூர்ணம் அதில் முழுமையாகக் கலக்க வேண்டும்.

பூர்ணமற்றவரிடம் நான் என் அன்பைப் பகிர்ந்தளிக்க முடியாது. ஏனென்றால் பரிபூர்ணமாவ இறைவனுக்கே, இந்தப் பரிபூர்ணமான அன்பை அர்ப்பணிக்க வேண்டும். இந்த மூன்று வரங்களையும் எனக்கு அனுக்கிரஹிக்க வேணடும் எனக் கோரினார்.

(22 - 1 - 96) ச.சா.த

## ஸெயிண்ட் ஜான்

- பாபா -

ஒரு நாள் ஸெயிண்ட் ஜான் தன் வழியிலே போய்க் கொண்டிருந்தார். ஒரு தேவதை Book of Revelations என்கிற புத்தகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். ஸெயிண்ட் ஜான் அதைக் கண்டார்.

அம்மா நீங்கள் யார்? என்ன செய்கிறீர்கள் என்று கேட்டார். ''நான் ஒரு தேவதை'' என்று பதில் சொன்னாள்.

,என்ன புத்தகம் படிக்கிறீர்கள்?''
''இது என் அன்பைப் பற்றிய ஒரு புத்தகம்''
''அப்படியானால் அந்தப் புத்தகத்தை நான் கொஞ்சம் பார்க்கலாமா?''

''எடுத்துக் கொள்! ஆனால் நீ இந்தப் புத்தகத்தைச் சாப்பிட வேண்டும். சாப்பிடும போது இது மிகவும் கசப்பாக இருக்கும். ஜீரணமான பிறகு அது மிக இனிமையானதாக மாறிப்போகும்

புத்தகத்தைச் சாப்பிடுவதென்றால் என்ன அதைப் படித்து புரிந்து தெளிந்து அதன் வழி நடக்க வேண்டும், என்பது தான் ஆனால் அந்தத் தேவதை சொன்னது போல் படிக்கும் போதும். அதை நடைமுறைப் படுத்தும் போதும் கடினமாகத்தான் இருக்கும். ஆனால் போகப் போக அது மிகவும் இனிமையானதாக மாறிப் போகும் பார்வையும் இனிமை நிரம்பியதாகக் காணப் படும்

எந்தத் தெய்வத்தின் அன்பை நம்முள் வைத்துப் போற்றப் பிரியப் படுகிறோமோ அந்த அன்புக்கு நாம் எல்லாவற்றையும் சரணாகதி ஆக்க வேண்டும, அதை விட்டு அன்பை விலை கொடுத்து வாங்க முடியாது

> **சற்குணமுள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்வார்கள் நீதியின் மேல் பசி தாகமுடையவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் திருப்தி அடைவார்கள்**
>
> இயேசுகிறிஸ்து

## ஸெயிண்ட்பால்

-பாபா-

ஸெயிண்ட் பால் என்பவர் பற்றி பைபிளில் படித்திருக்கலாம். முதலில் இவர் தான் ஜீசஸின் எதிரி, எப்போதும் ஜீசஸை தூற்றிக் கொண்டிருப்பார், ஒரு முறை ஜீசஸ் ஸெயிண்ட் பாலின் கனவில் தோன்றி,

''பால்! நீ மனிதன்தானே! உன் மேல் எனக்கு எந்த வகையிலும் விரோதம் இல்லை, உன்னைப் பற்றி நான் தவறாகப் பேசவில்லை. இருந்தும் கூட உனக்கு என்மேல் ஏன் இந்தக் குரோதம்? உனக்கு தீங்கு நினைக்காதவனைப் பற்றிப் தூற்றுவது வீணான முட்டாள் தனம் அல்லவா? இதன் மூலம் நீ உன்னைத் தானே வருத்திக் கொள்கிறாய்? ஜாக்கிரதை! ஜாக்கிரதை! ஜாக்கிரதை! என்று சொல்லி மறைந்தார்

அடுத்த நாள் காலை எழுந்தவுடன் ஸெயிண்ட் பால் நினைத்தார் மனிதனாகப் பிறந்து விட்டு மற்றொருவனைப் பற்றித் தூஷிப்பது எவ்வளவு பாவமான காரியம் என கழிவிரக்கப்பட்டார்

ஜீசஸ் மனித குலத்துக்காக நிறையப் பாடுபட்டார் அவர் மனித குலத்தின் மேல் எத்தனை அன்பு வைத்திருந்தார் என்பது அவர் வாழ்க்கையில் மிகத் தெளிவாகத் தெரிகிறது. மனிதர்களின் துன்பம் அவரை மிகவும் பாதித்தது.

தெய்வீக அன்பை தூஷிப்பது எவ்வளவு தவறு என்று புரிந்து கொண்ட ஸெயிண்ட்பால் அன்றிலிருந்து ஜீசஸை நேசிக்கத் தொடங்கினார் அவரின் பக்தராக மாறினார்,

அதே விதமாக அன்றிலிருந்து இன்று வரை பலவிதமான தெய்வீக அவதார புருஷர்கள் பல காரணங்களினால் சரிவரப்புரிந்து கொள்ளப்படாமல் விமரிசிக்கப்பட்டிருக்கிறார்கள்.

* * *

பிரேமை, தயை, கருணை இவற்றை வளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அத்தியாயம – 10

சென்ற இதழ் தொடர்ச்சி .........

### கம்பீரம்

இதற்கெல்லாம் பிறகு பதினான்கு வயதேயான இராமன் கம்பீரமாக எழுந்து நின்றார். நடந்து செல்லத் தொடங்கினார். அங்கிருந்த அனைவரும் இச்சிறுவன் இந்தப் பெரிய வில்லை எவ்வாறு உடைக்க இயலும் என்று கூறி எள்ளி நகையாடத் தொடங்கினர்.

இராமன் வந்தார். வந்து நின்றார் ஒரு முறை எல்லோரையும் சுற்றிப் பார்த்தார். வில்லை இடது கையால் எடுத்தார். கையில் எடுத்ததுமே சபையோர் மகிழ்ச்சிப் பெருக்கில் கூவி கைதட்டி ஆரவாரித்தார்கள்,

அடுத்தபடி வில்லின் நாணை மேறபுறம் இழுத்துக் கட்ட வேண்டும அதற்காக வில்லை வளைத்தார். சிவ தனுசு முறிந்தது.

மிதிலை நகரப் பெண்கள் அனைவரும் இந்நிகழ்ச்சியைக் கண்டு அதிசயமுற்றனர் இராமனை ஏற நோக்கி இவனே சீதைக்கு ஏற்றவன் என்றும் தெளிந்தனர் அவர்கள் இராமனை வருணிக்கத் தொடங்கினர்.

### திருமணமா?

இவ்வாறு அவர்கள் பேசி வருணித்துக் கொண்டிருக்கையில் திருமண ஏற்பாடுகள் தொடங்கின விசுவாமித்திரர் இராமனிடம் வந்து கேட்டார்.

''நீ தயாராக இருக்கிறாயா? இராமரி அதற்கு, சுவாமி, இது என்ன கேள்வி? தந்தை சொற்கேட்டல் மைந்தன் கடன்: தந்தையின அநுமதியில்லாமல் சீதையை நான் ஏறெடுத்தும் பாரேன் எனது பெற்றோருக்குச் செய்து சொல்லி அனுபபுங்கள் அவர்கள் அநுமதி எதுவோ அதன படி நான் நடககின்றேன்''

திருமணத்தை நிச்சயப்படுத்தி நிச்சயதார்த்தத்துக்கு மாலையணிவிக்கலாம் என்ற கருத்துக் கூறப்பட்டது இராமன் அதற்கு நிச்சயம் இங்கு செய்வதில்லை. அதற்குள்ள சமய சந்தர்ப்பம வேறு சீதையை நான் பார்க்க விரும்ப வில்லை. திருமணத்துக்கு முன் எந்தப் பெண்ணையும் ஏறெடுத்தும பார்த்தால் பெரும் பாவம் என்ற சத்தியத்தை நானறிவேன் என்றான். அதுவரையில் நான் பார்க்க விரும்பவில்லை, என அவர் நேரே தங்குமிடத்துக்குச் சென்றார்.

ஜனகர் திருமணத்துக்கு எல்லா ஏற்பாடுகளும் செய்தார் பல தேர்கள அயோத்திக்கு அனுப்பப்பட்டன செய்தி அயோத்திற்கு அனுப்பப்பட்டது. எல்லோரும் மிதிலைக்கு வரத் தொடங்கினர்.

அடுத்த நாள் தசரதரும் அவருடன் கூட அனைவரும் வந்து சேர்ந்தனர். திருமணத்துக்கு எல்லோரும் தயாராக இருந்தனர்.

இப்புனித திருமணம், உலகத்திற்கே உரிய திரு மணம்

சிவதனுசை முறித்தற்கு உட்காரணம் என்ன? சீதை பூமித்தாயின் மகள் விஞ்ஞான முறையில் பொருள் கொண்டால், பூமியின் காந்த சக்தி கொண்ட சீதை முழுமையும் காந்த சக்தி நிறைந்தவள் ஆகவே அவளால் சிவதனுசை எளிதில் தூக்க முடிந்தது சீதை நெருங்கும் சமயம், சிவதனுசு தானாக மேல் வரத்தொடங்கியது.

ஶ்ரீமத் நாராயணன் முழுமுதற்கடவுள் முழுமையான காந்த சக்தி மிக்கவர் ஆக சிவதனுசு எளிதில் அவரது கைவசம் வந்தது.

இவ்விருவரின் திருமணமே 'லோக கல்யாணம்' இரு காந்த மாற்றல்கள் ஒருங்கு சேர அவாகளது தேஜஸ் கண் கூசுமபடி அமைந்தது காரணம்.

அனால் அவர்கள் இருவரும் சர்வசக்தி ஸ்வரூபம் காந்த ஆற்றலால் வெளிப்பட்ட மின்சக்தி அது எல்லா விடங்களிலும் ஒளி வீசியது அதுவே ஒளியாற்றல்.

அவர்கள் உலகத்தை காப்பாற்ற, அரக்கத்தன்மைகளை அழிக்க மானுடர்வடி வந்தாங்கி மானுடன் போல நடித்து வாழ வந்தது இராம அவதாரம்

இவ்விதமாக மங்களகரமாக திருமணம் நடந்தது

### கேளிக்கை

ராம, லட்சுமண, பரதசத்ருக்னரின் திருமணம் நடைபெற எல்லா கேளிக்கைகளும் ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன அக்கால வழக்கத்தின் படி அரசர்களின் திருமணங்கள நான்கு நாட்கள் நடைபெறும்.

### கன்யாதானம

நான்காவது நாள் கன்யாதானம் இந்நாளன்று மணப்பெண்கள் தசரதனின் குமாரர்களைத் திருமணம் செய்து கொள்ள தானமாக அளிக்கப்பட்டனர் ஜனக மகாராஜர் சீதா ஊர்மிளா இருவரையும் கூட்டிக் கொண்டு வந்தார்.

மற்ற இருவரும் ஜனகரின் சகோதரரின் குமாரத்திகள் குசத்வஜர் மற்ற இருவரையும் கூட்டிக் கொண்டு வந்கார் அவாகள் கல்யாண மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர் குசத்வஜர் ஜனகரின் தம்பி மற்ற இரு பெண்களும் அவரது குமாரத்திகள் அவர்கள் பரதனுக்கும் சத்ருக்னனுக்கும் திருமணம் செய்விக்கப்பட்டனர்.

இவர்கள இருக்கையில் அமர்ந்தபின் தசரதன் தனது நான்கு குமாரர்களுடனும் அங்கு வந்தார் நால்வரும் ஒரே வரிசையில் வடக்கு நோக்கி அமர்ந்தனர் அவர்களுக்கு எதிராக மணப்பெண்கள் நால்வரும் அமர்ந்திருந்தனர் இவர்களுக்கிடையில் திரை கட்டப்பட்டது.

இது அரச குடும்பங்களின் மரபு இதற்கு முக்கியமான காரணமும் உண்டு திருமணத்துக்கு முன் மணமன் மணமகளைப் பார்க்கலாகாது மணப்பெண்ணும் மணமகனைக் காணலாகாது கன்யாதானம் செய்து கொடுக்கும் மங்கல நேரத்தில் தான் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ளலாம்

திரை நீக்கப்பட்ட அந்த நேரத்தில் கூட ராமர் எங்கேயோ பார்த்துக் கொண்டிருந்தார், அவர் சீதையைப் பார்க்கவில்லை ஜனகர் இருமுறை கூறியும பார்க்கவில்லை காரணம் என்ன? இராமர் இன்னும் மங்கல நாணைக்கட்டவில்லை

''திருமணமாவதற்கு முன் மணப்பெண்ணை ஏறிட்டுப் பார்த்தல் பெரும் பாவம் அது இஷ்வாகு குலத்துக்கு களங்கம் விளைவிக்கும் ஆகவே அவளை நான ஏறிட்டும் பாரேன்'' என்றார்.

இக்காரணத்தால் இராமனுக்கு ''ஏகபத்தினிவிரதன்'' என்ற பெயர் உண்டாயிற்று ஒரே சொல், ஒரே பத்னி,ஒரே அம்பு இவை இராமனுக்கு விருதுகளாக கூறப பட்டவை.

மங்கல நாண் கட்டப்பட்டது அவர்கள் இருவரும் அக்கினியைச் சுற்றி வலம் வந்தனர் ஒரு பணிப் பெண் சரயூ நதியிலிருந்து நீர் கொண்டு வந்தாள் இராமனின் பாதங்களை இந் நீரால் அலம்புதல் வேண்டும் பாத்திரத்தைக் கையில் வைத்துக் கொண்டே சீதை வெகு நேரமாக காத்திருக்கிறாள

திருமணத்தின் போது இத்தகைய இரகசியங்கள் உலகம் அறிவதற்காக வெளிப்படுத்தப்பட்டன சீதா பெரும் வளையல்கள் கையில் அணிந்திருந்தாள் கல்லுருவத்தில் இருந்த அகலிகை இராமன் மலர்பாதம் பட்டதுமே பெண்ணுரு அடைந்தாள இவ் வளையல்கள் இராமர் பாதம் பட்டதும் பெண்களாக மாறினால் இராமர் என்னைத் துறந்து விடுவார்.

இலட்சுமனன் மிக சூட்சுமமானவன் தன் அங்கவஸ்திரத்தால் இராமன் பாதங்களைத் துடைத்தான் பிறகு சீதையிடம் பாதத்தைக் கழுவுங்கள் என்று கூறினான் ஒவ்வொரு அவதாரத்தின் இரகசியமும் மிகவும் சூட்சுமமானது

இராமர் பாதங்களைக் கழுவி அந் நீரைத் தலை மேல் தெளித்துக் கொண்டு இராமனைச் சுற்றி வலம் வந்து உறுதி மொழிகள் கூறினாள்

தொடரும்

என்ன செயல் புரிந்தாலும் திரிகரண சுத்தியுடன் செயல் பட வேண்டும். - பாபா -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## புதிய ஆண்டு

புதிய ஆண்டு பிறந்தது
பட்ட துன்பம் கலைந்திடவே.
பழைய ஆண்டு கழிந்தது

மலர்கள் எங்கும் மணம் பரப்ப
வயல்களில் நெல் மணிகள் தலையசைக்க
இறையருள் எம்மிடம் இறங்கிவர
இனி இங்கு துன்பம் இல்லை என்றுசொல்ல

பகலவனின் ஒளிக்கீற்றில் பனித்துளிகள்
ஒளிர்ந்திடவே
புதிய ஆண்டு பிறந்தது
பட்ட துன்பங்கள் கலைந்திடவே
பழைய ஆண்டு கழிந்தது.

செ. பிரணவன்.
ஆண்டு–10
யா / கொக்குவில் இந்துக்கல்லூரி

## சிறுவனை மேடையேற்றிய அறிஞர்

பகுதாகி நகரில் அர்வி என்னும் பெயருடைய ஓர் அறிஞர் ஒரு நாள் சொற்பொழிவு நிகழ்த்திக் கொண்டு இருந்தார். அதைக் கேட்க மக்கள் திரண்டு இருந்தனர்.

அங்கு முன் வரிசையில் ஒரு சிறுவனும் அமர்ந்திருந்தான். சிறுவர்கள் முன் வரிசையில் உட்காரக் கூடாது என்று கூறிய ஒருவர் அச்சிறுவனை விலக்கி விட்டார்.

அந்தச் சிறுவன் வாடிய முகத்துடன் அங்கிருந்து எழுந்தான். அப்போது அங்கே அறிஞர் அர்வி வந்தார். சிறுவன் வாடிய முகத்துடன் இருப்பதைக் கண்டு விடயத்தை வினவி நடந்த சம்பவத்தைத் தெரிந்து கொண்டார்.

சிறுவனை அழைத்துக் கொண்டு மேடைக்குச் சென்று சிறுவனைப் பக்கத்தில் அமர்த்தி விட்டு சொற்பொழிவு ஆற்றத் தொடங்கினார். அச்சிறுவன் சொற்பொழிவை மிகவும் ஆர்வத்துடன் கேட்டுவிட்டு வீடு சென்றான்.

மறுநாள் அறிஞர் வரத்தாமதம் ஆகிவிட்டது. சிறுவன் மேடையில் ஏறி முதல் நாள் அறிஞர் கூறிய சொற்பொழிவை ஒரு எழுத்தும் பிசகாமல் மொழிந்தான் அப்போது அங்கு வந்த அறிஞர் தான் முதல் நாள் பேசிய பேச்சை ஒரு சிறுவன் மிக அழகாகப் பேசியதைக் கேட்டு ஆச்சரியப் பட்டான். அருகில் போய்ப் பார்த்த போது முதல் நாள் தான் மேடைக்கு அழைத்துச் சென்ற சிறுவன் தான் என்பதை அறிந்து கொண்டான். அச் சிறுவனை வெகுவாகப் பாராட்டிப் பரிசில்கள் வழங்கினார்.

அந்தச் சிறுவன் தான் பிற்காலத்தில் பெரிய பிரசங்கியாகவும் மாமேதையாகவும் விளங்கிய இபுலுயல்ஷி ஆவார்.

## மாணவர்களின் கவனத்திற்கு

-பாபா-

1. முதலாவதாக, உனது பெற்றோர்களை அன்புடனும், மரியாதையுடனும். நன்றியுடனும், போற்றி போஷித்து வருதல் வேண்டும்.
2. இரண்டாவதாக, உண்மையே பேசுதல் வேண்டும், தர்மத்தின் வழியிலே நடத்தல் வேண்டும்.
3. மூன்றாவதாக, நற்பயனுள்ள நேரம் போக மீதி நேரங்களில் எல்லாம் கடவுளின் திருநாமத்தைக் கூறிக்கொண்டே இருக்க வேண்டும்.
4. நான்காவதாக மற்றவர்களைக் குறைகூறிப் பேசுவதிலோ, அவர்களிடம் குற்றங் குறைகளைக் கண்டு பிடிப்பதிலோ, ஈடுபடலாகாது
5. முடிவாக, மற்றவர்களுக்கு எந்தவிதத்திலும் துன்பத்தை தரலாகாது.

## உயிர்களிடத்தில் அன்பு வேண்டும்

பாலகன் ஒரு சிறுவன் அவனுடைய தோழர்கள் இரண்டுபேர், தோழர்களும் பாலனும் வேட்டையாடுவதில் மிக விருப்பமுடையவர்கள்.

ஒரு நாள் பாலனும் அவனுடைய தோழர்களும் வேட்டையாடச் சென்றனர். அவர்களுக்கு ஒரு புறா தென்பட்டது. அந்தப் புறாவை அம்பு வில்லினால் வீழ்த்த விரும்பினர்.

அந்தப் புறா பறந்து வந்து தியானத்தில் இருந்த முனிவரின் முன் நின்றது. அவன் அம்பு வில்லினால் எய்தான். அந்த அம்பு முனிவரின் நெற்றியில் பட்டது. அந்த முனிவர் நெற்றியைத் தடவிப் பார்த்தார். கோபங்கொண்டார் சிறுவனைப் பார்த்து

### ★ சிறுகதை ★

''நீயும் புறாவாகப் போ'' என்று சபித்தார். அவனும் புறாவாக மாறினான். அவன் தன் தோழர்கள் கண்டால் அம்பால் எய்வார்கள் என எண்ணி வீட்டை நோக்கிப் பறந்தான். வீட்டு வாசலில் நின்று கூவினான் அதைக் கண்ட தாய்

''நீ பறந்து செல்'' பாலகன் கண்டால் கொன்று விடுவான் என்றாள். தனது தாயிடம் நான் தான் பாலகன் என்று கூற அவனால் முடியவில்லை. திரும்பவும் தாய், நீ பறந்து போ என்றாள். அவன் மரத்தில் பறந்து போய் சோகத்துடன் இருந்தான்.

அவன் பயந்து கண் விழித்தான். தனது கை கால்களைத் தடவிப் பார்த்தான். இதுவரையும் தான் கண்டது கனவு என உணர்ந்தான். அருகில் இருந்த அம்பு வில்லைத் தூக்கி வீசி எறிந்தான் அன்றிலிருந்து அவன் தன் தோழர்களைப் பார்க்கச் செல்வதில்லை.

அ. அனித்திரா.
ஆண்டு–6
யாழ் / இந்து மகளிர் கல்லூரி

## கற்பனையூர்

பச்சைச் கிளிகள் பாடும் ஊர்
பஞ்சு மரங்கள் நிறைந்த ஊர்
மஞ்சள் ஆறு பாயும் ஊர்
மங்கள கானங்கள் கேட்கும் ஊர்

கன்னிப் பெண்கள் பாடும் ஊர்
கண்ணிய மானவர் வாழும் ஊர்
பச்சைக் கிளிகள் பல்லவி பாட
பைந்தமிழ் எங்கும் ஒலிக்கும் ஊர்

இன்பமே எங்கும் நிறைந்த ஊர்
இனிய மலைகள் காணும் ஊர்
இன்சொற்கள் கூறி வாழும் ஊர்
இதுவே நான் காணும் கற்பனையூர்

செ. மதுரா.
ஆண்டு–6
யாழ்/ இந்து மகளிர் கல்லூரி.

எப்போதும் உதவி செய் யாரையும் புண்படுத்தாதே · பாபா ·

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்குவம் அடைந்த ஆன்மா பக்குவமடையாத ஆன்மாவுக்கு விழிப்புணர்வை ஊட்டுவதே திருவெம்பாவை

சென்ற இதழ் தொடர்ச்சி ..

முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளாயும் பின்னைப் புதுமைக்கும் புதுமையானவனாகிய இறைவனின் செல்லக் குழந்தையாம் அடியார்கள் சில வரங்களை உரிமையுடன் கேட்கின்றனர். எங்கள் பெருமானாகிய உனக் சொன்று சொல்லுகின்றோம், கேள் எம்கொங்கை உன் அன்பர்க்கே உரியதாகுக அது மட்டுமன்றி எம்முடைய கை உமக்கல்லாது வேறு பணிகளைச் செய்ய வேண்டாம். இவை மாத்திரமன்று இரவு பகல் எந்நேரமும் உன்னைத் தவிர வேறு ஒன்றையும் காணாத இந்நிலையை எமக்கு தந்தால் எமக்கு குறை ஒன்றுமேயில்லை. என்ற நிறை நிலையை பின்வரும் பாடலடி புலப்படுகின்றது,

''எங்கள் பெருமான் உனக்கு ஒன்று உரைப்போம் கேள்
எம் கொங்கை நின் அன்பர் அல்லாதோர் சேரற்க
எம்கை உனக் கல்லாது எப்பணியும் செய்யற்க'.

என்று அடியார்கள் உரிமையுணர்வோடு இறைவனிடம் வரங்களை வேண்டுதலைக் காணக் கூடியதாக உள்ளது.

அவனின்றி அணுவும் அசையாது. அவனுடைய ஆடலே அண்ட சராசரங்கள் அனைத்தையும் அசைய வைக்கின்றது. உயிர்கள் மீது கொண்ட அருளினால் இறைவன் படைத்தல், காத்தல், அருளல், அழித்தல், மறைத்தல் ஆகிய ஐந்தொழில்களை ஆற்றுகின்றான். இதனை உணர்த்துவதே நடராஜ வடிவம் அப்படிப்பட்டவனுக்கு உயிர்களை ஆட்கொள்ளுதல் ஒரு விளையாட்டாகும் இதனை,

''ஐயா நீ ஆட்கொண்டருளும் விளையாட்டின் உய்வார்கள் உய்யும் வகை எல்லாம் உய்ந்தொழிந்தோம்'' என்ற அடி புலப்படுத்தி நிற்கின்றது. அவன் இவ்வாறு ஆட்கொண்டாலே ஆர்த்த பிறவித்துயர் நீங்கும் அவ்வாறு அவன் ஆட்கொள்வதற்கு சைவசித்தாந்தம் கூறுகின்ற திருவருட் சக்தியினுடைய துணை வேண்டும். அத்தகைய சக்தியை

''எங்கெங்கு காணிலும் சகதியடா ஏழு கடல் அவள வண்ணமடா'' என்ற பாடல் வரிகளால் இறைவனைக் கண்டவர் பாரதியார் மாணிக்க வாசகரும் இதற்கு விதிவிலக்கல்ல.

★ பா. பாலகுமாரி ★
உடுவில் மகளிர் கல்லூரி,
ஆசிரியை

''முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்து உடையாள்
என்னைத் திகழ்ந்து எம்மை ஆளுடையாள
இட்டிடையின்
மின்னிப பொலிந்து எம்பிராட்டி திருவடிமேல்
பொனனம் சிலம்பில் சிலம்பித் திருப் புருவம்
என்னைச் சிலை குலவி நம்தெம்மை ஆள் உடையாள்
தன்னிப் பிரிவு இவா எம்கோமான் அன்பர்க்கு
முன்னி அவன் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழை ஏல் ஓர் எம்பவாய்''

மேகம் கடலைக்குடித்து அதன் நீரைக்குறைத்து மேலே கிளம்பி கார் நிறத்தை அடைகின்றது. இதன் நிறத்தை உடையவள் சக்தி, அவ்வாறே இவளும் ஆன்மாவின் கீழ் நிலையை விலகிக் அதனது ஆணவத்தை விலகிக் அதனை மேல் நிலைக்கு கொண்டு செல்கின்ற தத்துவத்தை இது விளக்குகின்றது. இவ்வாறே மின்னலை இடைக்கும், இடியைச் சிலம்பிற்கும், வானவில்லை புருவத்திற்கும் அவளுடைய அருளை எதையுமே வேண்டிப் பெறாமல் உதவி செய்கின்ற மழைக்கும் உவமையாக கூறியிருப்பது மணிவாசகரின் ஆன்மீக அறிவின் ஆழத்தை விளக்கி நிற்கின்றது,

சக்தி பின்னமிலானாகிய எம்பிரானே அனைத்துக்கும் பிறப்பிடமும் முடிவிடமுமாகும் ஆத்மாவினது இலட்சியமும் அந்த பரமாத்மாவின் இருப்பிடமே ஆகும். இதனை

''போற்றி அருளுகநின் ஆதி ஆம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றி எல்லா உயிர்க்கும் போகமாம் பூங்குழல்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் ஈறாம் இணையடிகள்

என்ற அடிகள் அனைத்திற்கும் மூலம் அவனது பாத மலரே என்பதனைப் புலப்படுத்துகின்றது ஆத்மா பரவாத்மாவோடு இணைகின்ற அந்த இணைப்பாகிய முத்தியே ஆத்மாவின் இலட்சியம் அந்தப் பாதைக்கு எம்மை அழைத்துச் செல்கின்றது மணிவாசகரது திருவெம்பாவைப் பாடல் என்று சொன்னால் அது மிகையாகாது.

★ ★ ★

## பொய் பேசுவதால் உண்மை மறைக்கப்படுகிறது

பொய் பேசுதல் பாலமானது. பாரதூரமானது இந்தப் பொய்யின் காரணமாக உண்மை மறைக்கப்படுகிறது நியாயம் ஒழிக்கப் படுகின்றது யார் நியாயத்துக்கு உரியவரோ அவருக்குரிய நியாயம் போய் சேரமுடியாதபடி பொய் ஒரு தடைக்கல்லாக அமைந்து விடுகின்றது. அதே நேரத்தில் நிரபராதிகளாக மிக அப்பாவிகளான பலர் இந்தப் பொய்யின் காரணமாக ஏமாற்றப் படுகின்றார்கள்,

இதன் காரணமாகத்தான் இந்தப் பொய் ஒரு மாசுடைய தன்மை என ரசூல்லா சொல்லி இருக்கிறார்கள். வாழ்கையின் எந்தக் கட்டத்திலும் இந்தப் பொய் கூடாது.

ஆயிரம் பொய்யைக் கூறியாவது ஒரு திருமணத்தை நடாத்தி வைக்க வேண்டும். அல்லது இந்த வியாபாரத்தைக் கொண்டு நடாத்துவதாக இருந்தால் இந்தத் தொழிலைச் செய்வதாக இருந்தால் பொய் பேசாமல் செய்ய முடியாது என்றெல்லாம் தப்புக் கணக்குப் போட்டுக் கொண்டு இருக்கிறோம். எந்தச் சந்தர்ப்பத்திலும் பொய் உரைப்பது கூடாது.

பொய் உரைப்பதன் காரணமாக நியாயம் மறைக்கப்படுகிறது அநியாயம் தலையெடுப்பதற்கு அது காரணமாக அமைவதன் காரணமாக இதை இஸ்லாம் நமக்குத் தடை விதித்து இருக்கிறது.

இதே போன்று வாக்குறுதியளித்தால் உயிர் போயினும் அதை நாம் நிறை வேற்ற வேண்டும் நிறைவேற்ற முடியாத எந்த வாக்குறுதியையும் நாம் எவருக்கும் அளிக்கக் கூடாது. நிறைவேற்றக் கூடிய வாக்குறுதிகளைத் தான் நாம் அளிக்க வேண்டும்,

இதே போன்று நம்மை ஒருவர் நம்புகிறார், என்று சொன்னால் நம்மிடத்திலே அவருக்கு நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது. அவர் உயர்வாக நம்மை மதிக்கிறார். அந்த நம்பிக்கைக்கு நாம் துரோகம் செய்தால் இதை விட பொல்லாத குணம் இருக்கவே முடியாது,

நம்பப்பட்ட ஒருவரால் ஏமாற்றப்பட்டு விட்டோம் என்று ஒருவர் உணரக்கூடிய நிலைக்கு வருவதை விட மிகக் கடுமையான ஒரு தீய சந்தர்ப்பம் இருக்கவே முடியாது. எனவே இந்த மூன்று சந்தர்ப்பங்களையும் தவிர்த்து சிறந்த முறையிலே இஸ்லாம் கூறிய ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து வாழ முயற்சிப்போம்:

ஆதாரம் இலங்கை வானொலி தேசியசேவை

3ம் பக்கத்தொடர்ச்சி

### எல்லையற்ற அன்பின......

மார்கழி மாதம் தேவர்களுக்கு அதிகாலை வேளை இக்காலத்தில் திருவெம்பாவை திருப்பாவை பாடித் தேவர்களைத் துயிலெழுப்புகின்றோம் தைப் பொங்கல் ஆரம்பமாகும் உத்தராயணத்தில் ஆலய மகோற்சவங்களும் சுப காரியங்களும் நடைபெறும்.

கலாச்சார ரீதியாகப் பார்க்கும் போது அரை ஆண்டு நிறைவைக் குறிக்கும் ஆடிப் பிறப்பன்று உத்தராயண முடிவைக் குறிக்குமுகமாக அரைவட்ட வடிவுடைய கொழுக்கட்டை அவித்து நிவேதனம் செய்யும் வழக்கமும் பொங்கல் தினம் பூரணமாக ஒரு வருட முடிவைக் குறிக்கும் விதத்தில் உண்ருடை வடிவான மோதகம் அவித்து நிவேதனம் செய்யும் வழக்கமும் உண்டு.

தொகுப்பு
இ. சஜீவி

5ம் பக்கத்தொடர்ச்சி

### பாபாவின் அதிசய......

நான் பிரசவம் முடியும் வரை நிற்பதற்கு பாபா துணைபுரிய வேண்டும் என்று எனக்கு விருப்பம் என்று மனைவி கூறினார் அடபைத்தியமே கந்தோர் விடயத்தில் ஏன் பாபாவை இழுக்கிறாய் அவருக்கும் இதற்கும் என்ன தொடர்பு என்று கண்டித்தேன்.

என்னே புதுமை மூன்றாம் நாள் நண்பரின் கடிதமொன்று வந்தது வருடம் முடியும் மட்டும் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் வேலை செய்யலாம் என்றும் உத்தியோக பூர்வமான கடிதம் விரைவில் வரும் என்றும் எழுதி இருந்தார்.

பார்த்தீர்களா! பாபாவுக்கும் கந்தோருக்கும் என்ன தொடர்பு என்றீர்களே இப்ப என்ன நடந்திருக்கு என்றார் என் மனைவி இருவருக்கும் மகிழ்ச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நீங்களும் கேட்கலாம்

**பக்தர்:** சுவாமி! மனத்தூய்மை (சித்த சுத்தி) என்கிறார்களே அப்படி என்றால் என்ன?

**சுவாமி!** இது தவறு மனம் எப்போதும் தூய்மையாக உள்ளது எனவே மனத்தூய்மை என்பது ஏது? மனத்தூய்மை உன்னால் தான் கெடுகிறது ஆனால் மனம எப்போதுமே பரிசுத்தமானது

உனது கைக்குட்டையை நீ உபயோகப்படுத்தும் முன் அது தூய்மையாக வெண்மையாக உள்ளது. உபயோகப்படுத்தும் போது அழுக்கேறி நிறம் மாறி விடுகிறது. அதை சலவைக்கு போட்டால் அது கழுவப்பட்டு அழுக்கு நீங்கி வெண்மையாக தூய்மையாக உனக்கு கிடைக்கின்றது.

கைக்குட்டைக்கு வெண்மை புதிதாகவா வந்தது இல்லை அதில் நீ ஏற்றிய அழுக்கு நீக்கப்பட்ட பின் அதன் இயல்பான வெண்மையும் தூய்மையும் மீண்டும் தெரிகின்றது,

மனம் கைக்குட்டை போன்றது. ஆசைகள் என்ற அழுக்கு படியப் படிய அதன் தூய்மை மறைக்கப்படுகிறது ஆசைகள் என்ற அழுக்கை நீக்கினால நிர்மலமாகி விடுகிறது சித்த சுத்தி (உள்ளத்தூய்மை) என்றால் ஆசைகளை கட்டுப்படுத்தி நற்சிந்தனைகளை வளாத்துக் கொள்வதாகும்.

**பக்தர்:** சுவாமி சாதனா (ஆன்மீகப் பயிற்சி) தின்சரி தவறாமல் கடைப்பிடிக்க வேண்டுவது அவசியமா!

**சுவாமி!** சாதனா அத்தியவசியமாக இருப்பதால் தான் அதை தினசரி வாழ்வில் கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டும் பாத்திரங்களை தினமும் தேய்த்துக் கழுவுவதால் தான் அவை தூய்மையாக இருக்கின்றன. மன உறுதி, அசைக்க முடியாத நம்பிக்கை, பரிபூரண சரணாகதி, இவை ஏற்படும வரை இடை விடாமல் சாதனா கடைபிடிக்கப் பட வேண்டும் உ-ம்: நெற்பயிருக்கு தினமும் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். அப்படிச் செய்ய வில்லை எனறால் பயிர் காய்ந்து கருகி அழிந்து விடும்.

ஆனால் பனை, ஆலமரம் போன்றவைகளுக்கு தினமும் நீர் பாய்ச்ச வேண்டிய அவசியம் இல்லை. அவை தானாகவே வளரும் இதற்கு காரணம என்னவெனில் பெரிய மரங்களின் வேர்கள் பூமிக்குள் ஊடுருவிச் சென்று ஆழத்தில் உள்ள நீர் நிலைக்கு உள்ளே தனக்குத் தேவையான நீரைப் பெற்றுக் கொள்கின்றன. அதனால் நாம் அவற்றிற்கு தினசரி நீர் பாய்ச்ச வேண்டியதில்லை.

அதே போல மன உளைச்சல்கள் முழுவதும் அடங்கி நம்பிக்கை ஆழமாக உறுதியாக ஊன்றும் வரை ''சாதனா'' கடைப்பிடிக்கப் பட வேண்டும்.

**பக்தர்:** ஸ்வாமி ! பக்தி சரணாகதி இவ்விரண்டுக்கும் உள்ள வேறுபாடு யாது ?

**சுவாமி:** பக்தி என்பது த்வைதம் அதாவது இரட்டை நிலை இந்த நிலையில் கடவுள் பக்தர் என இருவர் உள்ளனர் இவ்விருவரும் ஒருவரை ஒருவர் பிரிக்க முடியாத அளவுக்கு நெருக்கமானவர்கள் பக்தி பக்தனை இறைவனோடு இணையச் செய்கிறது... ஆனால் சரணாகதி என்பது அத்வைத நிலை ஒரு பக்தன் 'எல்லாம் இறைவனே'' என்ற முடிவுக்கு வந்த பின தனித்துவ நிலை பக்தர்களுக்கு இல்லை தனது என்று அந்த பக்தர் கருதுவதில்லை. தான் என்ற உணர்வில் இருந்து முற்றிலும் நீங்கிவிடுகிறார். உதாரணமாக,

தண்ணீர் சக்கரை இவை இரண்டும் உருவத்திலும் தன்மையிலும் வேறுபடுகின்றன இது த்வைதம் இது பக்தி மார்க்கம் இந்தச் சக்கரையை எடுந்து தண்ணீரில் போட்டால் சக்கரை முழுவதும் கரைந்து விடும அப்பொழுது அது தண்ணீரும் அல்ல சக்கரையும் அல்ல. அது ஒரு (SYRUP) கரைசல் அது போல ஒரு பக்தன் தன்னை முழுமையாக இறைவனிடத்திலே அர்பபணித்து விட்டால் அது தான் சரணாகதி அதுவே அத்வைதம்.

## "இறைதூதன் சர்வமத மாத வெளியீடு

### சிறுகதை, கவிதைப் போட்டிகள்

இறைதூதன் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்ட ஒரு வருட ஆண்டு நிறைவை (05 – 04 - 1999) முன்னிட்டு இரு பிரிவுகளாக நடாத்தப்படும் சிறுகதை, கவிதைப் போட்டிகள்.

முதலாவது பிரிவு:- 8 வயதிலிருந்து 15 வயதுக்குட்பட்டோர்.
இரண்டாவது பிரிவு:- 16 வயதிலிருந்து 35 வயதுக்குட்பட்டோர்.

மனித மேம்பாட்டுக் குணங்களான சத்யம், தர்மம், சாந்தி, பிரேமை, அகிம்சை, இவற்றை உள்ளடக்கியதாக உங்கள் கதைகளும கவிதைகளும் எழுதப்பட வேண்டும்.

---

### "இறைதூதன்" சர்வமத வெளியீடு
### கதை, கவிதை போட்டிக் கூப்பன்

கதை / கவிதையின் பெயர்: ...........................

எழுதியவர் பெயர்: ...........................

புனை பெயர் (இருந்தால்): ...........................

வயது: ...........................

முகவரி: ...........................
...........................
...........................

திகதி: ...........................

கையொப்பம்: ...........................

மாணவராயின் பெற்றோர் அல்லது வகுப்பாசிரியர்
கையொப்பம்: ...........................

பாடசாலையின் பெயர்: ...........................

---

### போட்டி விதிமுறைகள்

1. கதைகள், கவிதைகள் ''வெள்ளைத்'' தாளில் தெளிவான கையெழுத்தில ஒரு பக்கம் மாத்திரம் எழுதப்பட வேண்டும்.
2. சிறுகதைகள் 5 பக்கங்களுக்கு மேற்படாமலும், கவிதைகள். 20 வரிகளுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
3. நாட்டின எப்பாகத்திலுமுள்ள எல்லாமதத்தைச் சார்ந்தவர்களும் பங்குபற்றலாம்.
4. ஆக்கங்கள் நேரிலோ சாதாரண தபால் மூலமோ அனுபபலாம.
5. கதைகள், கவிதைகள் சொந்தக கற்பனையில் உதித்தவையாக இருக்க வேண்டும். வேறு பத்திரிகைகளில் வெளிவந்ததாகவோ வேறு போட்டிக்கு அனுப்பியதாகவோ இருக்கக் கூடாது.
6. இங்கு வெளியாகியுள்ள கூப்பனை மாதிரி நீங்களே ஒன்றைத் தயாரித்து உங்கள் ஆக்கங்களுடன் இணைத்து அனுப்ப வேண்டும்.
7. தகுந்த பரிசுகள் வழங்கப்படவுள்ளது.
8. அனுப்பும் கடித உறையின் மேற்பக்கத்தில் 'சிறுகதை கவிதைப்போட்டி'' க்கான சிறுகதை அல்லது கவிதை எனக்குறிப்பிடவும்.

போட்டி முடிவு திகதி
28- 02 - 1999

அனுப்ப வேண்டிய முகவரி
ஆசிரியா இறைதூதன்
மானிப்பாய் சத்ய சாயி நிலையம்
ஹலக்லேன், மானிப்பாய்.

இப்பத்திரிகை மானிப்பாய் பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையத்தினால் கே. கே. எஸ். வீதி, பூநாறிமரத்தடி, ஸ்ரீ சாயி அச்சகத்தில் அச்சிடப்பெற்று 10 - 01 - 1999 வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இறைதூதன்

# Messenger of God 1999

*MY WORK IS MY BLESSINGS* - BABA -

**தை — January**

| ஞாயி | திங் | செவ் | புத | வியா | வெள் | சனி |
|---|---|---|---|---|---|---|
| 31 | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

**மாசி — February**

| ஞாயி | திங் | செவ் | புத | வியா | வெள் | சனி |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | | | | | | |

**பங்குனி — March**

| ஞாயி | திங் | செவ் | புத | வியா | வெள் | சனி |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |

**சித்திரை — April**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | |

**வைகாசி — May**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 30 | 31 | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |

**ஆனி — June**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | | | |

**ஆடி — July**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | |

**ஆவணி — August**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

**புரட்டாதி — September**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | | |

**ஐப்பசி — October**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 31 | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

**கார்த்திகை — November**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | | | | |

**மார்கழி — December**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | |

**விழாக்கள்**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| தை | 15 | பொங்கல் | வை. | 06 | ஈஸ்வராம்பாள் தினம் | ஐப். | 19 | விஜயதசமி |
| மாசி | 14 | மகாசிவராத்திரி | ஆடி | 28 | குரு பூர்ணிமா தினம் | கார். | 19 | மகளிர் தினம் |
| பங். | 25 | ஸ்ரீ ராம நவமி | புர. | 02 | ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி தினம் | கார். | 23 | பகவானின் ஜெயந்தி தினம் |
| சித். | 13, 14 | புதுவருடப் பிறப்பு | புர. | 27 | ஷீரடிசாயி பிறந்த தினம் | மார். | 25 | நத்தார் தினம் |

**ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையம் மானிப்பாய்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org